**செய்தி வெளியீடு எண் : 1154** **நாள் : 12.07.2022**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் இயங்கும் ஒருங்கிணைந்த சேவை மையங்களில் (One Stop Centre) பணிபுரியும் பணியாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி (Refresher Training) இன்று (12.07.2022) சென்னையில் நடைபெற்றது. இந்த புத்தாக்கப் பயிற்சியினை மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்து, சிறப்புரையாற்றி, பணியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஷம்பு கல்லோலிக்கர், இ.ஆ.ப., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இயக்குநர் திருமதி த.ரத்னா, இ.ஆ.ப., மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் மற்றும் 38 மாவட்டங்களில் செயல்படும் ஒருங்கிணைந்த சேவை மையங்களின் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in